ExamsDaily

# தினசரி நடப்பு நிகழ்வுகள்

## 06 பிப்ரவரி 2021

## தேசிய நிகழ்வுகள்

**இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை 16 Mk-III என்ற ஹெலிஹாப்டரை வாங்க முடிவு செய்துள்ளது!!**

- இந்திய கடற்படை இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கடலோர பாதுகாப்புக்காகமூன்று "மேட் இன் இந்தியா" மேம்படுத்தப்பட்ட புதிய ரக ஹெலிஹாப்டர்களை வாங்கியுள்ளது.
- 16 Mk-III ரக ஹெலிஹாப்டர்களில் HAL (Hindustan Aeronautics Limited) நிறுவனம் மூன்று ஹெலிஹாப்டர்களை இந்திய கடற்படைக்கு வழங்கியுள்ளது.
- நேற்று நடந்த "ஏரோ இந்தியா 2021" நிகழ்வில் மொத்தமாக 201 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளன.

**லக்வார் மின்சார திட்டத்திற்கு (lakhwar electricity project) மத்திய சுற்றுசூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது!!**

- மத்திய அரசு அறிமுகப்படுத்த உள்ள லக்வார் மின்சார திட்டத்திற்கு (lakhwar electricity project) மத்திய சுற்றுசூழல் மற்றும் காலநிலை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திட்டம் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள டெஹ்ராடூன் என்ற மாவட்டத்தின் யமுனை நதி கரையில் அமைக்கப்பெற்ற உள்ளது.
- இந்த திட்டத்திற்கான மொத்த மதிப்பு 5747.17 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**IAF மற்றும் HAL ஒரு இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது!!**

- IAF (Indian Air Force) மற்றும் HAL (Hindustan Aeronautics Limited) இவை இரண்டும் கூட்டாக இணைந்து ஒரு இணையதளத்தை உருவாகியுள்ளது.
- "ஏரோ இந்தியா 2021" நிகழ்வின் போது இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த இரு அமைப்புகளின் மத்தியிலும் பகிரப்படும் தகவல்கள் பாதுகாப்பான முறையில் பகிர இந்த இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இது பணி மற்றும் பட்ஜெட் மேற்கோள் செயல்முறைகளை எடுக்கும் காலாவகாசத்தினையும் குறைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**HAL பற்றி**

**தலைவர் மற்றும் எம்.டி - ஆர் மாதவன்**

**தலைமையகம் - பெங்களூர்**

**நிறுவப்பட்டது – 1940**

**இந்தியாவிற்கும் பஹ்ரைன் நாட்டிற்கும் இடையேயான 1 வது கூட்டு செயற்குழு கூட்டம் நடைபெற்றது!!**

- இந்தியா மற்றும் பஹ்ரைன் நாட்டிற்கும் இடையே முதன் முதலாக கூட்டு செயற்குழு கூட்டம் நடைபெற்றுள்ளது.
- இந்த கூட்டம் வீடியோ கான்பரன்சிங் மூலமாக நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பஹ்ரைன் எரிசக்தி ஆணையத்தின் தலைவர் டாக்டர் அப்துல் உசேன் தலைமை தாங்கினார்.
- இந்தியா சார்பில் எரிசக்தி அமைச்சகத்தின் இணை செயலாளர் தினேஷ் தயானந்த் ஜக்தேல் பங்கேற்று இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

**ஆசியான்-இந்தியா சுற்றுலா அமைச்சர்களின் 8 வது கூட்டம் நடைபெற்றது!!**

- இந்தியா சார்பில் ஆசியான்-இந்தியா சுற்றுலா அமைச்சர்களின் 8 வது கூட்டத்தில் லாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரஹ்லாத் சிங் படேல் பங்கேற்றார்.
- இந்த கூட்டம் ஆன்லைன் வாயிலாக தான் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்கள் அனைவரும் கொரோனா நோய் காரணமாக உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.
- சுற்றுலாத்துறையில் எந்த மாதிரியான மேம்பாடுகளை கொண்டு வரலாம் என்பது குறித்து இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்தனர்.




**மூன்றாவது பங்களாதேஷ் திரைப்பட விழா 2021!!**

- மூன்றாவது பங்களாதேஷ் திரைப்பட விழா 2021 மேற்கு வங்க மாநிலத்தின் தலைநகர் கொல்கத்தாவில் துவக்கப்பட்டது.

- பங்களாதேஷ் தகவல்துறை அமைச்சர் டாக்டர் ஹசன் மஹ்மூத் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று துவக்கி வைத்தார்.
- இந்த விழா தொடர்ந்து 5 நாட்கள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில் பங்களாதேஷ் நாட்டின் 32 திரைப்படங்கள் திரையிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.
- இந்த விழாவின் முதன்மை திரைப்படமாக பங்களாதேஷ் பிரதமரின் வாழ்க்கை திரைப்படமான "Hasina-A Daughter’s Tale" என்ற திரைப்படம் திரையிடப்பட்டது.

## மாநில நிகழ்வுகள்

**அசாம் மாநில அரசு 3 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை மக்களுக்கு வழங்க உள்ளது!!**

- பாகிச்சா தன் புராஸ்கர் திட்டத்தின் கீழ் தேயிலைத் தோட்டப் பகுதிகளைச் சேர்ந்த 7.5 லட்சம் மக்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்க அசாம் அரசு வழங்க முடிவு செய்துள்ளது.
- இந்த திட்டம் கடந்த 2017 - 2018 ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. இந்த நிதி உதவி திட்டம் மூலமாக தேயிலை தோட்ட பகுதிகளை சேர்ந்த மக்களுக்கு அவர்களின் வங்கி கணக்கிற்கே பணம் செலுத்தப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதல் முறையை வாக்காளர்களுக்கு தபால் மூலம் வாக்காளர் அட்டை வழங்க திட்டம்!!**

- தமிழக தேர்தல் ஆணையம் மற்றும் அஞ்சல் துறை மக்களுக்கு தபால் மூலமாக வாக்காளர் அட்டையினை வழங்க ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தினை தமிழக தேர்தல் அதிகாரி சத்யபிரபு மற்றும் சென்னை அஞ்சல் துறை தலைமை அதிகாரி சாருகேசி ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.
- இந்த ஒப்பந்தம் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்கு வங்க மாநிலத்தில் 348 கி.மீ தோபி - துர்காபூர் இயற்கை எரிவாயு குழாய்வழியை பிரதமர் திறந்து வைக்க உள்ளார்!!**

- மேற்கு வங்காளத்தில் உள்ள பிரதான் மந்திரி உர்ஜா கங்கா திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும் 348 கி.மீ தோபி - துர்காபூர் இயற்கை எரிவாயு குழாய்வழியை பிரதமர் திறந்து வைக்க உள்ளார்.
- இந்திய எண்ணெய் கழகத்தின் ஹால்டியா சுத்திகரிப்பு நிலையத்தின் இரண்டாவது Catalytic-Iso-de-waxing யூனிட்டையும் பிரதமர் திறந்து வைத்தார்.




**தமிழக அரசு ரூ .12,110 கோடி ரூபாய் மதிப்பிலான பண்ணை கடனை தள்ளுபடி செய்துள்ளது!!**

- கூட்டுறவு வங்கிகளிடமிருந்து 12,110 கோடி பயிர் கடன்களை தள்ளுபடி செய்வதாக தமிழக அரசு சட்டப்பேரவையில் அறிவித்துள்ளது.
- இந்த தள்ளுபடி மூலமாக 16.43 லட்ச தமிழக விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
- கொரோனா பொது முடக்கம், வடகிழக்கு பருவமழை மற்றும் தமிழகத்தை தாக்கிய சூறாவளிகள் காரணமாக விவசாயிகள் அதிகமாக பதிப்படைந்தனர். இதற்காக தான் இந்த தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழக முதல்வர் 600 கோடி ரூபாய் மதிப்பிலான “நருவி” மருத்துவமனையை திறந்து வைத்துள்ளார்!!**

- தமிழக முதல்வர் 600 கோடி ரூபாய் மதிப்பிலான “நருவி” என்ற பெயரில் புதிய மருத்துவமனையினை வீடியோ கான்பரன்சிங் மூலமாக திறந்து வைத்தார்.
- இந்த மருத்துவமனையில் 500 படுக்கை வசதிகள் உள்ளதாக தெறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த மருத்துவமனை Henry Ford Health System என்ற அமெரிக்கா நிறுவனத்துடன் இணைத்து கட்டமைக்கபட்டுள்ளது.
- இந்த மருத்துவமனை அமைப்பதற்காக கடந்த 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தம் போடப்பட்டது.

## நிதித்துறை விவகாரங்கள்

**2021-22 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 10.5 சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி கணிப்பு!!**

- 2021-22 நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 0.5 சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி தற்போது கணித்துள்ளது.
- இந்தியாவில் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்காக நாணயக் கொள்கையினை மறுஆய்வு செய்யவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ரெப்போ விகிதம் 4 சதவீதத்திலும், ரெவெர்ஸ் ரெப்போ விகிதம் 3.35 சதவீதத்திலும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- நடப்பு நிதியாண்டின் நான்காம் காலாண்டில் சிபிஐ பணவீக்கம் 5.2 சதவீதமாக திருத்தப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

**இந்தியாவுக்கான கூகிள் கிளவுட் குழுமத்தின் இயக்குனராக பிக்ரம் சிங் பேடி நியமனம்!!**

- கூகிள் கிளவுட் இந்தியாவுக்கான புதிய நிர்வாக இயக்குநராக பிக்ரம் சிங் பேடி நியமிக்கப்பட்டுள்ளார்.
- கூகிளின் ஆசியா பசிபிக் கிளவுட் பிரிவின் தலைவராக பதவி உயர்த்தப்பட்ட கரண் பஜ்வாவிடமிருந்து பிக்ரம் சிங் பேடி இந்த பதவியை பெற உள்ளார்.

**கூகிள் கிளவுட் பற்றி**

**தலைமை நிர்வாக அதிகாரி- தாமஸ் குரியன்**

**தலைமையகம்- கலிபோர்னியா, அமெரிக்கா**